[1982 பிப்ரவரி 8

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) ஆவுடையாபுரம் மற்றும் நக்கலக்கோட்டை ஆகிய சிற்றூர்களில் உள்ள குடிநீர் ஆதாரங்கள் அனைத்திலும் மாதிரி நீர் எடுத்து பரிசோதனை செய்து பார்த்ததில் ஆவுடையாபுரத்தில் உள்ள நான்கு நீர் ஆதாரங்களும் குடிக்கத் தகுதியற்றவை எனவும், நக்கலக்கோட்டையில் உள்ள மூன்று நீர் நிலைகளில் இரண்டில் நல்ல குடிநீர் உள்ளதெனவும் அறியப்பட்டது. ஆவுடையாபுரத்தில் உள்ள எல்லா நீர் ஆதாரங்களும் குடிக்கத் தகுதியற்றவையாகவிருப்பதால் மாற்று நீர் ஆதாரம் அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. நக்கலக்கோட்டை சிற்றூரைப் பொருத்தவரை மூன்றாவது கட்டத்தில்,வருகின்ற ஆண்டில் விருதுநகர் ஊராட்சி ஒன்றியம் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட இருக்கிறது. அப்போது மேற்கொண்டு குடிநீர் வசதி செய்வது குறித்து பரிசீலனை செய்யப்படும்.

மழை அளவைக் கருவிகள்.

*வினா எண் 96.— திருமதி தா. இராசாம்பாள் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மழை அளவைக் கருவிகளை (Rain gauge) பிர்க்கா மையங்களில் வைத்து மழை கணக்குகள் பதியும் திட்டம் அரசிடம் இருக்கின்றதா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இல்லை. ஆனால் ஏற்கெனவே, தமிழ்நாடு முழுவதிலும் குறிப்பிட்ட 685 இடங்களில் மழை அளவைக் கருவிகள் அமைக்கப்பட்டுள்ளன. இவை மத்திய மாநில அரசுத் துறைகளால் நிறுவப்பட்டவை. ஆய்வுப் பணிகளுக்கு இவை போதுமானவை.

திருமதி தா. இராசாம்பாள் : தலைவர் அவர்களே, பிர்க்கா மையங்களில் மழைக் கணக்குகள் பதியும் திட்டம் அரசிடம் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இனிமேலாவது அப்படி வைக்க இந்த அரசு முன் வருமா என்று கேட்க விரும்புவதோடு, விவசாயிகளோடு தொடர்புடைய மின்சார வாரியம், விவசாயத் துறை ஆகிய துறைகளும் தன்னுடைய விவசாய சேவையைக் கருதி இந்தத் மழைக் கணக்குகள் பதியும் கருவிகளை வைத்துக் கணக்குகளை எடுத்து, முன்கூட்டியே திட்டமிட்டு விவசாயிகளுக்கு உதவ ஒரு ஒருங்கிணைந்த நடவடிக்கையை மிடுக்க அரசு முன் வருமா என்றும் கேட்க விரும்புகிறேன்.

1982 பிப்ரவரி 8]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, பிர்க்காவாரியாக வைக்க வேண்டிய அவசியம் இல்லாத காரணத்தாலேதான் மழைக் கணக்குகளை புதிய வைக்கும் திட்டம் பிர்க்காவாரியாகத் தேவையில்லை என்று அரசு கருதுகிறது. மாண்புமிகு உறுப்பினர் கேட்பதைப் போல், ஏற்கெனவே விவசாயத் துறையில் 16 இடங்களிலும், பல்கலைக் கழகங்களில் 4 இடங்களிலும், தோட்டக் கலை நிறுவனத்தினால் 9 இடங்களிலும், பட்டுப் பூச்சி வளர்ப்புத் துறையால் 1 இடத்திலும் பொதுப்பணித்துறையின் மூலமாக 266 இடங்களிலும், வருவாய்த் துறை மூலமாக 258 இடங்களிலும், வனத் துறை மூலமாக 97 இடங்களிலும், வைக்கப்பட்டிருக்கிறது. அது அல்லாமல், மத்திய அரசும் சில இடங்களில் வைத்து இருக்கிறது. இவைகளே போதுமானதாக இருப்பதால்தான் பிர்க்காவாரியாகத் தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

திருமதி தா. இராசாம்மாள் : தலைவர் அவர்களே, மின்சாரத் துறையிலே இதை வைத்தால் அதனால் மழைக் காலங்களில் எவ்வளவு மின்சாரம் கிடைக்கும், வறட்சிக் காலத்தில் எவ்வளவு மின்சாரம் கிடைக்கும் என்று அவர்கள் முன்கூட்டியே சொல்லக்கூடிய சூழ்நிலை ஏற்படும். ஆகவே, அரசு மின்சாரத் துறையிலே அதை வைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, பொதுப்பணித்துறை 266 இடங்களிலே வைத்துள்ளது என்று ஏற்கெனவே சொன்னேன். அதிலே மின்சாரத்துறையும் அடங்கி இருக்கிறது. மின்சாரத் துறை என்று தனியாக ஒரு துறை இல்லை. அது வாரியமாக இருக்கிறது. ஆனால், அதனுடைய நடவடிக்கைகள் பொதுப்பணித்துறை மூலமாக கட்டுப்படுத்தப்படுவதால், பொதுப்பணித் துறையே அதையும் கவனித்து வருகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கிருட்டினகிரி அணையிலிருந்து பெனுகொண்டா ஏரிக்கு தண்ணீர் கொண்டு செல்லும் திட்டம்.

***வினா எண் 97.— திரு. பி. எஸ். துரைசாமி :** மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருட்டிணகிரி அணையிலிருந்து பெனுகொண்டா *ஏரிக்கு நீரைக் கொண்டு வரும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம், எனில் எப்பொழுது ?